# மனிதர்களே! உங்களை அல்லாஹ் கண்காணிப்பவனாக இருக்கிறான்; சைத்தானின் அடிச்சுவற்றை பின்பற்றாதீர்கள்

A.K. அபூஷஹீத் தெளலத், அதிரை

ஆதம்(அலை) அவர்களையும் அவருடைய மனைவி ஹவ்வா(அலை) அவர்களையும் சுவர்க்கத்தில் இருந்து வெளியேற்றிய போது அல்லாஹ் கூறுகிறான் ஓ ஆதமே! நீங்கள் இப்பூமியில் சிறிது காலம் வாழுங்கள் அங்கு நீங்கள் வாழக்கூடிய நாட்களில் உங்களுக்கு நேர்வழி காட்டக்கூடிய (வேதம்) என்னிடமிருந்து வேதங்கள் வரும் அதை நீங்கள் பின்பற்றுவீராக! என்கிறான் அல்லாஹ். மனிதனுக்கு நேர்வழி காட்டக்கூடியது அல்லாஹ்வுடைய வேதம் மட்டுமாகும் அந்த வேதத்தை அல்லாஹ் ஒவ்வொரு காலத்திலும் அவர் அவர்கள் வாழ்ந்த மக்களுக்கு அவர், அவர் பேசக்கூடிய மொழியில் இறைவன் நபிமார்களுக்கும் மனித சமுதாயத்திற்கும் இறைவன் நேர்வழி காட்டியாக அவனுடைய வேதத்தை வழங்கினான்.

நபி(ஸல்) அவர்கள் நபி ஆவதற்கு முன்பாக அவர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், எழுத்தறிவு இல்லாதவர்களாகவும் இறைவன் என்றால் யார், ஹலால் என்றால் என்ன? ஹராம் என்றால் என்ன? வானம், பூமி, மழை, பிறப்பு இறப்பு மறுமைநாள் நல்லது, கெட்டது இதுபோன்ற நிறைய விஷயங்களை நபி(ஸல்) அவர்கள் அறியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் அன்றைய கால கட்டத்தில் நபி(ஸல்) அவர்கள் மக்கத்து மக்களிடம் அல் அமீன் என்றும் அல் சித்தீக் என்றும் நற்பெயர் உள்ளவர்களாகவும், மறியாதைக்குறியவர்களாகவும் வாழ்ந்தார்கள். இந்த நேரத்தில்தான் அன்னை கதீஜா(ரழி) அவர்களிடம் நபி(ஸல்) அவர்கள் பணியாளாக வேலை செய்கிறார்கள். இவர்களுடைய உண்மை, நேர்மை, கண்ணியம், மரியாதை இது போன்ற காரியங்களை கண்ட அன்னை கதீஜா(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களை திருமணம் முடித்துக் கொள்கிறார்கள்.

இதன் பின் நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் நபியாக தேர்ந்தெடுக்கிறான். இதன் பின் தான் மனிதர்களுக்கு நேர்வழி காட்டியாக அல்லாஹ் சுபஹானஹுதஆலா திருமறையான அல்குர்ஆனை அவர்கள் போசக்கூடிய அரபு மொழியில் கொஞ்சம், கொஞ்சமாக மக்களுடைய வாழ்வு எப்படிப்பட்டது என்பதையும் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதையும் இறைவன் என்றால் யார்? அவன் எப்படிப்பட்டவன் அவனுடைய தன்மைகள் என்ன அவனை அப்படி கண்ணியப்படுத்த வேண்டும். அவன் வாழ்க்கை நெறிகளை வகுத்துக்கொள்ளவேண்டும் என்பதையெல்லாம் இந்த அல்குர்ஆன் வேதத்தின் மூலம் மக்களுக்கு நேர்வழி காட்டியாக அல்லாஹ் அருளியதுதான் இந்த வேதம். ஒரு முறை ஆயிஷா(ரழி) அவர்களிடம் ஒருவர், நபி(ஸல்) அவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது என்று வினவிய போது அவர்கள் குர்ஆனாகவே இருந்தார்கள். அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் கூறியதாக முஸ்லிம், புகாரி, அபூதாவூத், திர்மிதி போன்ற ஹதீஸ் கிதாபுகளில் காண முடிகிறது.

அன்றைய கால கட்டங்களில் மக்கத்து மக்களிடம் எந்த வேதங்களும் இல்லாமல் இருந்தது அதாவது

மக்கமா ஊரை அடுத்து மதினா என்ற ஊரில் யூதர்களும், நாங்(கிறிஸ்தவர்கள்)களும் வாழ்ந்தார்கள் அவர்களிடம். தவ்ராத், இன்ஜீல் போன்ற வேதங்கள் இருந்தது அவர்கள் வேதத்தையுடையவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால் இந்த மக்கத்து காஃபிர்கள் (மனிதர்கள்) அந்த வேதத்தை பின்பற்றாமலும் அதை ஏற்காமலும் வாழ்ந்தார்கள். இவர்கள் கூறினார்கள். நாங்கள் நபி இபுராஹீம்(அலை) அவர்களின் வாரிசுகள் என்று கூறிக்கொண்டு நாங்களே இறைவனுக்கு மிக நெருங்கியவர்கள் என்றும் பல அறிய "ஜாகிலியா" மடையர்களாக வாழ்ந்தார்கள். பல, பல உருவங்களை செய்து உருவவழிபாடுகளை காபாவைச் சுற்றி வைத்துக் கொண்டு இவர்கள் யாவரும் நபிமார்கள் என்று வணங்கி கண்ணியப்படுத்திக் கொண்டும் வாழ்ந்தார்கள் முரடர்களாகவும் வாழ்ந்தார்கள். ஹஜ்ஜுடைய காலங்களில் நிர்வானமாக தவாப் செய்வதும் பெண் பிள்ளைகள் பிறந்தால் அது இழிவு என்றும் அந்த குழந்தை இறைவனுக்கு உரியது என்றும் உயிரோடு புதைத்தும் வந்தார்கள். இந்த கால கட்டத்தில் தான் அல்லாஹ் நபி(ஸல்) அவர்களை நபியாக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வேதத்தையும் (குர்ஆனை) இறக்குகிறான். இந்த வேதத்தின் மூலமாகத்தான் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை மனித சமுதாயத்திற்கு அனைவருக்கும் இந்த அல்குர்ஆன் பொதுவாக்கப்பட்டு அருளப்படுகிறது.

**மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் எத்தகையவென்றால் அவன்தான் உங்கள் ஒரே ஆத்மாவில் இருந்து படைத்தான் அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான் இன்னும் அந்த இருவரிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான்; இன்னும் அந்த இரவிலிருந்து (ஆண், பெண்) அனேக ஆண்களையும், பெண்களையும் படைத்தான்; இப்பூமியில் பரவச் செய்தான் இன்னம் அல்லாஹ்வைக் கொண்டு தமக்குரிய உரிமைகளை நீங்கள் (ஒருவருக்கொருவர்) கேட்டுக்கொள்கிறீர்களே அத்தகையவனையும், மேலும் இரத்தக்கலப்பு சொந்தங்களைத்துண்டித்து விடுவதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கணிப்பவனாக இருக்கிறான்.** *அல்குர்ஆன் 4:1*

அல்லாஹ் சுபுஹானவுத்தாஆல மனிதர்களுக்கு என்னிலடங்கா அருட் கொடைகளை வழங்கி உள்ளான் அவனுடைய அருட்கொடைகளை உங்களால் எண்ணிப்பார்க்க நீங்கள் முயற்சித்தான் அவனுடைய அருட்கொடைகளை உங்களால் எண்ணி முடிக்க முடியாது. அவன் மனிதர்கள்மீது கருணையுடையவனாகவும் உள்ளான் அவனுடைய அருட் கருணையால்தான் மனிதன் செய்யக்கூடிய அநியாயங்களையும், அக்கிரமங்களையும் அவன் உடனுக்குடன் பிடிப்பதாக இருந்தால் (தண்டிக்க) இந்த பூமியில் எந்த உயிரினயங்களும் காணமுடியாது என்கிறான் அல்லாஹ்.

இப்படிப்பட்ட அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையேனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்கள் சொற்ப நபர்களே. மனிதன் மனிதனாக வேண்டுமே தவிர ஆடு, மாடுகளில் (மிருகங்களைப்) போல் வாழாமல் அவன் எப்படி வாழவேண்டும் என்பதை தெளிவாக அல்குர்ஆனின் தெள்ளத் தெளிவாக கண்ணாடி போல் நம் கையில் அவனுடைய வேதத்தை உலக மக்கள் யாவருக்கும் அருளியுள்ளான். சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு தெள்ளத் தெளிவான நேர்வழி கிடைக்கும் என்கிறான். ஒரு மனிதன் தன் தாய், தந்தையிடம் எப்படி நடந்து கொள்வது.

கணவன், தன் மனைவி, மக்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் ஏழை, எளியவர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும். ஒரு மனிதன் எப்படி ஹலாலான முறையில் தொழில் செய்யவேண்டும். ஒருமனிதன் தன் பொன் பொருளில் இருந்து யார், யார் எப்படி ஜகாத் கொடுக்கவேண்டும்.

ஒரு மனிதன் மக்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும், வானத்தையும், பூமியையும், சூரியனையும், சந்திரனையும், இரவையும், பகலையும், பிறப்பையும், மரணத்தையும் யார் படைத்தது. இவைகளை படைத்து ஆட்சி செய்யக்கூடியவன் யார்? என்பதை தெள்ளத் தெளிவாக அல்லாஹ் இந்த வேதத்தின் மூலம் அருளி நான் அந்த வேதத்தை அடைந்தால் மட்டும் போதுமா? எப்படி வாழ்வது என்பதை அல்லாஹ்வுடைய நபிமார்கள், தூதர்கள் மனிதர்களுக்கு நடந்து வாழ்ந்து காட்டினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் காட்சி ஹஜ்ஜின் போது கூறினார்கள் : **அல்லாஹ்வின் அடியார்களே உங்களை நான் தெள்ளத்தெளிவான பால் போன்ற ஒரு மார்க்கத்தில் உங்களை விட்டுச் செல்கிறேன் அல்லாஹுடைய வேதத்தை (கயிற்றை) பற்றிப் படித்துக் கொள்ளும் வரை நீங்கள் வழி தவரமாட்டீர்கள் என்னிடம் கண்டதையும் என்னிடம் கேட்டதையும் பிற மனிதர்களுக்கு எத்தி வைப்பீராக. அதை அவர் கேட்கக்கூடியவர். உங்களைவிட அதிகமாக அந்த காரியத்தை செய்யக்கூடியவராக இருப்பார்கள். அல்லாஹ் என்னிடம் ஒப்படைத்த இந்த காரியத்தை இந்த மார்க்கத்தை இந்த வேதத்தை உங்களிடம் ஒப்படைத்து விட்டேன். இங்கு வந்துள்ள அனைவரும் சாட்சியாவார்கள், யா அல்லாஹ் நீயும் சாட்சியானவன் என்று அவர்கள் கடைசியாக அவர்கள் திருவாய் மலர்ந்தார்கள்.**

நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த மார்க்கத்தை இன்று பல இமாம்கள் மக்களுக்கு எத்தி வைத்தார்கள் அவர்கள் எத்தி வைத்தவைகளில் தவறு ஏதுமில்லை அவர்களை பின்பற்றிய மக்கள்தான் தவராக புரிந்து கொண்டு இன்று ஒரு முஸ்லிமை நீ முஸ்லிமா? என்று கேட்டால் ஆம் என்பதை அடுத்து, அடுத்து வருவது நான் ஒரு ஹனஃபி அல்லது ஷாஃபி அல்லது மாலிக்கி அல்லது ஹம்பலி என்று பல இமாம் பெயர்களை கூறி நான் இந்த முஸ்லிம் என்பான். அல்லாஹ் ஒருவன், ரசூல் ஒருவர், மார்க்கம் ஒன்று இஸ்லாம் ஒன்று மனிதன் பிறப்பும் இறப்பும் ஒன்றே மனிதன் இறப்பதும் ஒரே வழி மறுமை நான் என்பது எல்லோரும் அறிந்தது ஒன்றே இப்படி இருக்கும் போது மார்க்கத்தை கூறு போட்டது யார்? ஹனஃபிக்கு ஒரு சட்டம், ஷாஃபிக்கு ஒரு சட்டம், ஷ யாவுடைய வழி தனி இப்படி ஒவ்வொரு கூட்டமாக கூறு போட்டுக் கொண்டு இன்று நம்மில் ஒற்றுமை இல்லாமல் கண்டபடி பிரிந்து கிடக்கும் முஸ்லிம் சமுதாயம் ஒற்றுமை இல்லாமல் நம் நாமே அடித்துக் கொண்டு, காட்டிக் கொடுத்துக் கொண்டும் நான் (என்னுடைய மதஹபு) உயர்ந்தவன். என்னைவிட நீ தாழ்ந்தவன். உனக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.   முஸ்லிம் என்ற பெயரில் பிரிவினையால் பிரிந்து கிடக்கும் சமுதாய மக்கள் இன்று யூதர்களிலும், நஸ்ரானிகளிலும் பல மனித மிருகங்களால் கடித்து குதரப்பட்டுக் கொண்டு வாழ்ந்து கொண்டு (அழிந்து) இருக்கிறது.

இந்த முஸ்லிம் சமுதாயம் இன்று உலக மக்களால் முஸ்லிம் சமுதாயத்திற்கு கிடைத்த பெயர் **"முஸ்லிம் தீவிரவாதி"** முஸ்லிம் தீவிரவாதி இவன் சிறிய கத்தியை வைத்துக் கொண்டிருந்தால் அவன்

தீவிரவாதி. அடுத்த மதத்துக்காரன் வெடிகுண்டு வைத்திருந்தால் அவன் மன பாதிப்பதற்காக வைத்துள்ளான் என்கிறான். நம்மில் நம்மவர்களை ஒருவனுக்கு ஒருவனை பிடிக்காவிட்டால் அவனை போலீஸ்காரனிடம் காட்டிக் கொடுப்பது அவன் தீவிரவாதி. அவன் கோயிலை இடிக்க, சர்ச்சை இடிக்க, பஸ்ஸை வெடிக்க வைக்க வெடிகுண்டு வைத்துள்ளான் அல்லது சதி திட்டம் தீட்டினான் என்று போலீஸில் இல்லாது பொல்லாததை கூறி அடுத்தவனை காட்டி (மாட்டி விடுவது) இது நம்மில் உள்ள முஸ்லிம், முஸ்லிம் என்று பெயர் தாங்கியாக இருக்கக்கூடியவன் செய்யக்கூடிய காரியமாக இருந்து வருகிறது. அடுத்த மதத்துக்காரன் நம்மை பழி வாங்குவதை விட நம் முஸ்லிம் சமூதாயத்திற்கு நம்மை நாமே அடித்துக் கொண்டு அழிந்து கொண்டிருக்கிறது நம் சமூதாயம். இயக்கம் என்ற பெயரில் இளைஞர்களின் மூலையை (மூலைச்சலவை) தன் பக்கம் ஈர்க்க வைத்து இயக்கம் என்ற பெயரில் கட்சியாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய வேலை தேவையில்லாமல் ஆர்ப்பாட்டம் என்றும் தேர்தல் வந்தால் எவன் அதிகமான பண பொட்டி கிடைக்கிறதே அதை வாங்கிக்கொள். பொதுமக்களை அவனுக்கு வோட்டு போட்டு இவனுக்கு வோட்டு போடு அவனுக்கு போடாதே இவனுக்கு போடாதே என்று கூறி மக்களை பைத்தியக்காரர்களாக முட்டாள்களாக ஆக்கி மக்களை பைத்தியம் என்று என்னிக் கொண்டு இன்று இயக்கம் என்ற பெயரில் கட்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஒரு காலத்தில் தவ்ஹீத் என்ற தாவா பணியை செய்தவர்கள் ஒரு மனிதன் பேச்சில் (சைத்தானின் வாய் பேச்சில் மதி மயங்கி) ஈர்க்கப்பட்டு அது இன்று இயக்கமாக மாற்றப்பட்டு இது கட்சியாக வெளியே தெரியாவிட்டாலும் கட்சியாக செயல்பட்டுக் கொண்டிருப்பதை தெள்ள தெளிவாக நாம் காணமுடிகிறது இவர்கள் யாவரும் மக்களை வழிகேட்டில் இழுத்துச் சென்று கொண்டிருப்பதையும் இந்த சமுதாய மக்கள் காவு கொடுக்கப்படுவதையும் இவர்கள் இயக்கங்கள் என்ற பெயரில் தனக்குப் பின்னால் இளைஞர்களின் கூட்டத்தை வைத்துக்கொண்டு முஸ்லிம் சமுதாயத்தை நாங்கள்தான் தாங்கி பிடிப்பவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள். இயக்கங்கள் என்ற பெயரில் அரசியல் கட்சியாக இன்னும் முத்திரை மட்டும் தான் குத்தாது ஒன்றுதான் பாக்கி இந்த இயக்கத்தில் யாரும் எதுவும் கேட்கக்கூடாது இயக்கத்தில் அங்கம் வகிக்கக் கூடியவர்கள் யாவரும் இயக்கத்தின் தலைவருக்கு கட்டுப்பட்டு நடப்பவராக இருக்கவேண்டும். ஏன் எதற்கு என்று வினா? எழுப்பக்கூடாது இயக்கத்தின் தலைவர் என்ன கட்டளையிடுகிறாரோ அவர்கள் வாய்மூடி செயல் படவேண்டும் ஏன்? என்ன? எதற்கு என்று எதிர் கேள்வி கேட்டால் உடனே பதவியில் இருந்து இறக்கி விடுவார்கள் அல்லது போலீஸில் மாட்டி விடுவார்கள். இவர்கள் சமூக விரோதி அல்லது தீவிரவாதி என்று முத்திரை குத்தப்பட்டு பிரச்சாரம் செய்வார்கள். பாதிக்கப்பட்டவனின் வாக்கு மூலத்தை மக்கள் முன்னால் மேடை போட்டு பேச வந்தால் பின்னால் இருந்து கொண்டு மிரட்டல்கள் பலரும் மிரட்டுவார்கள். இப்படி இந்த இயக்கங்களின் செயல்பாடுகள் யாவும் அரசியல் கட்சியாக செயல்பட்டுக் கொண்டிருப்பதை வெட்ட வெளிச்சமாக அல்லாஹ் காட்டி விட்டான்.

இரண்டு துஆவிற்கு திறை மறைவு இல்லை என்கிறார்கள் நபி(ஸல்) அவர்கள் 1. பாதிக்கப்பட்டவனுடைய துஆ 2. தாய், தந்தையரின் துஆவாகும் என்கிறார்கள். நபி(ஸல்) அவர்கள் இந்த இயக்கவாதிகள் இந்த சுயநலவாதிகள் இந்த உலக ஆசை கொண்டவர்கள் தான் ஒரு முஸ்லிம் என்பதையே மறந்தவர்களாகவும் அல்லாஹ்வையும் மறந்தவர்களாகவும் மறுமை நாளின் அல்லாஹ்வின் தண்டனையை மறந்தவர்களாகவும் தற்பொழுது வாழ்ந்து வருகிறார்கள்.

**மேலும் எவரேனும் வரம்பு மீறி அக்கிரமமாக இவ்வாறு செய்தால் நாம் அவரை (விரைவில்) நரகத்தில் நுழையச் செய்து விடுவோம் இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக்க இலகுவானதாகவே இருக்கிறது.** *அல்குர்ஆன் 4:30*

மீண்டும் அல்லாஹ் கூறுகிறான் : **எதை விட்டும் நீங்கள் விலக்கப்பட்டிருக்கிறீர்களோ அத்தகைய பெரும் பாவமான காரியங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், உங்களுடைய (மற்ற சிறிய) பாவங்களை விட்டும் உங்களை போக்கி விடுவோம் இன்னும் சங்கையான நுழை விடத்தில் உங்களை நாம் நுழைவிப்போம்.** *அல்குர்ஆன் 4:31*

சிலர் பிணத்தை வைத்துக் கொண்டு வசூல் செய்வார்கள் அந்த பிணத்தில் மீது விழுந்த காசு பணத்தை வயிறு புடைக்க சாப்பிடுவார்கள் நெருப்பை. இன்னும் சிலர் இயக்கத்தை வளர்ப்பதாக வசூல் வேட்டை செய்வார்கள். அந்த இயக்கத்தில் உள்ளவர்களை சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வசூல் வேட்டை நடத்துவார்கள். அதைக்கொண்டு சுகபோகமாக வாழ்வார்கள். மக்களிடம் கூறுவார்கள் நாங்கள் எங்கள் இயக்கத்தை வளர்க்க வெளிநாட்டில் இருந்து எந்த காசு பணத்தையும் பெற்றவர்கள் அல்ல பெறவும் மாட்டோம் என்று மக்களை ஏமாற்றுவார்கள். நாங்கள் மறியல் செய்யப் போய்கிறோம் எங்கள் உரிமைகளை கேட்டு மறியல் செய்யப் போகிறோம் என்று ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் வசூல் வேட்டை செய்வார்கள் இவர்களைப்பற்றி அல்லாஹ் என்ன கூறுகிறான்.

**விசுவாசங் கொண்டோரே! உங்களிடையே இரு சாரார்ின் சம்மதத்தின் பேரில் நடைபெறும் வர்த்தக மூலகமாகலன்றி (உங்களுடைய) பொருள்களைத் தவறான முறையில் நீங்கள் உண்ணாதீர்கள். அன்றியும் (இதற்காக) உங்களையே நீங்கள் கொலை செய்து கொல்லாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களிடமும் மிக்க கிருபையுடையோனாக இருக்கிறான்.** *அல்குர்ஆன் 4:29*

இவர்கள் ஒருவரிடம் ஒப்பந்தம் செய்வார்கள். அந்த ஒப்பந்தத்தை மீறி நடப்பார்கள். அதன்பின் அவர்மீது அவதூறும் அள்ளி வீசுவார்கள் அதன்பின் பாதிக்கப் பட்டபின் விவாதத்திற்கு அழைத்தால் வரமாட்டார்கள் நலுவி விடுவார்கள் இவர்கள் யாவரும் கோழைகளாக வாழ்வார்கள் பசுத்தோல் போர்த்திய நரியாக இருப்பார்கள். இவர்களுடைய புத்தியும் நரி தந்திரமாகவே இருக்கும். பாதிக்கப்பட்டவர்களாக நாங்கள் குரல் கொடுப்போம் என்பார்கள். பாதிக்கப்பட்டான் போய் இவர்களிடம் முறையிட்டால் செவிடன் காதில் விழுந்த சங்கைப் போன்று காது இருந்தும் செவிடனாக இருப்பார்கள். இவர்கள் பாதிக்கப்பட்டவனுக்கா குரல் கெடுப்பவர்கள் அல்ல அல்ல, பாதிக்கப்பட்டவனுடைய குரலை நெறிப்பவர்கள்.

இன்னும் அத்தகையவர்கள் மனிதர்களுக்கு காண்பிப்பதற்காகத் தங்கள் செல்வங்களை (செல்வாக்கை) செலவு செய்வார்கள். இவர்களை அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங்கொள்ள மாட்டார்கள். மேலும் எவனுக்கு ஷைத்தான் தோழனாக இருக்கிறானோ அவனே தோழனால் மிகக்கெட்டான் என்கிறான் அல்லாஹ்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் அல்லாஹுவுடைய மார்க்கத்தை எத்தி வைக்கக்கூடிய நல்லடியார்கள் அனைவருக்கும் சோதனைகள் இல்லாமல் இல்லை. உதாரணத்திற்கு ஒன்று அல்ல பல எடுத்துக்காட்டுக்கு ஒன்று. எகிப்து நாட்டில் ஜமால் அப்துல் நாசர் என்பவர் பிரதமராக வாழ்ந்த காலத்தில் அந்த எகிப்து நாட்டில் 90 சதவீதம் முஸ்லிம்கள் முஸ்லிம்கள்தான் ஆட்சி செய்து வந்தார்கள் முஸ்லிம்கள்தான் ஆனால் இஸ்லாமிய ஆட்சி அங்கு நடக்கவில்லை. ஜமால் அப்துல் நாசர் அமெரிக்கனோடு ஓர் புதிய ஒப்பந்தம் ஏற்பாடு செய்ய ஏற்பாடுகள் நடந்தது. இதை அறிந்த முஸ்லிம் இளைஞர்கள் சிலர் இஃவானுல் முஸ்லிமின் என்ற இயக்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்தார்கள் காரணம் இது முஸ்லிம்கள் அதிகமாக வரக்கூடிய நாடு நாம் அமெரிக்கவோடு உறவு கொண்டால் அவனுடைய கலாச்சாரம் (அனாகரியத்தை) புகுத்தி இஸ்லாத்தை அழித்து விடுவான் என்று புரட்சி செய்தார்கள். இந்த புரட்சி நாசருக்கு பிடிக்காது இருந்தது. இந்த புரட்சியாளர்கள் கடுமையாக எச்சரித்தனர். அல்லாஹ் ஒருவனுக்கே நாங்கள் பயப்படக்கூடியவர்கள் என்று கூறி மீண்டும் புரட்சி செய்தார்கள். அதில் முக்கிமானவர் செய்யத் குதூப் என்பவர் ஆவர். இவரை பலதடவை நாசர் ஜெயிலில் அழைத்து சித்திரவதை செய்தான் அதன்பின் ஒருமுறை பொது மக்களுக்கு போலீசாருக்கும் நடந்த கலவரத்தில் இதை சாக்காக வைத்துக்கொண்டு இந்த கலவரத்திற்கு காரணம் செய்யத் குதூப் தான் என்று வீண் பழி சுமத்தி செய்யத் குதூப்பை கைது செய்தான். செய்யத் குத்தூப் ஓர் தீவிரவாதி என்று முத்திரை குத்தி கைது செய்து 20 வருடம் ஜெயிலில் அடைத்தான் அதன்பின் அவரை நாயைக் கொண்டு கடிக்கச் செய்து அதன்பின் அவரை தூக்கிலிட்டான். அன்னார் ஷஹீதாக்கப்பட்டார். இன்றையில் இருந்து இவர் ஷஹீத் செய்யத் குதூப் ஆனார் அவர் சிறையில் இருந்த போது பல குர்ஆன் தப்ஸீர்களும் அவனுடைய சுய சரிதையும் எழுதினார் அவர் மரணத்திற்குப் பின் இவர் எழுதப்பட்டது பல மொழிகளில் வெளியிடப்பட்து நாசர் என்பவன் விமானத்தில் பயணம் செய்யும் போது விமானம் வெடித்து சிதறி இறந்தான்.

இப்படி ஒவ்வொரு கால கட்டத்திலும் கொடுங்கோள் செய்யக்கூடிய மனிதர்களிடத்திலும், ஆட்சியாளர்களிடத்திலும் அல்லாஹ்வுடைய தாவா தவ்ஹீதை எத்தி வைக்க கூட்டத்தை அல்லாஹ் அனுப்பிக் கொண்டுதான் இருப்பான் அந்த அல்லாஹ்வுடைய கூட்டத்தாருக்கு இவ்வுலகில் கிடைக்கக்கூடிய பெயர் தீவிரவாதி புரட்சியாளக்கள் அடுத்து தூக்குமேடை இது இவர்களுக்கு அல்லாஹ் கொடுக்கக்கூடிய சன்மானம் இந்த உலக சன்மானத்தின் பதவி மறு உலகில் அவர்கள் சுஹதாக்கள் நிறைந்த சொர்க்க பூங்காவில் சொர்க்கத்தில் அல்லாஹ் கொடுக்கும் சன்மானமாகும். இந்த அர்ப்ப சுக உலக வாழ்க்கைக்கு அடிமையாகி காட்டிக்கொடுக்கும் முனாஃபிக்குகளுக்கு இவ்வுலகம் சொர்க்கம் மறு உலகம் நரக நெருப்புதான் இவர்களுக்கு இறைவன் கொடுக்கும் சன்மானமாகும்.

**முஃமின்களே அல்லாஹ்வின் கயிற்றை (அல்குர்ஆனை) பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் எக்காலத்திலும் வழி தவறமாட்டீர்கள்.**

ஜனவரி 2005 அந்நஜாத்